மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆக்கபூர்வமான ஆலோசனை. ஆகவே, இது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி சி.எம். சூரியகலா.

திருமதி சி.எம். சூரியகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

34—

பத்மநாபபுரம் கோட்டை

***18730—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வரலாற்றுச் சிறப்பு மிக்க பத்மநாபபுரம் கோட்டையின் சுவர்களில் பழுது ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் அமைந்திருக்கின்ற பத்மநாபபுரம் கோட்டை தொல்லியல் துறையின் வசம் இல்லை. இருப்பினும், உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அந்தச் சுற்றுச் சுவரைப் பராமரிப்பது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின்

2005 செப்டம்பர் 23]

தலைமையில் நடைபெற்று வருகின்ற இந்த நல்லாட்சியில் எனது பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் உதயகிரி கோட்டையைப் பழுது பார்த்து, புனரமைக்க ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில் பழுதடைந்து மிகவும் மோசமாக இருந்து வரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பத்மநாபபுரம் கோட்டையைப் பழுது பார்க்கும் பணி ஆய்வில் உள்ளது என்று அறிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அரசின் ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் மேற்படி பணியினை விரைந்து அரசு செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 35, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

35—

அரசு தொழில்நுட்பக் கல்லூரி

22532—திரு. ஆர்.டி. கணேசன்:

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தேனியிலே ஒரு அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*